Thondamuthur Co-operative Stores

* 245 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the auditor in his Final Audit Special Report for 1962–64 to the District Co-operative Audit Officer, Coimbatore, has pointed out a number of irregularities and misappropriations in the Management of the Thondamuthur Co-operative Stores Limited; and

(b) if so, the details of major irregularities and misappropriations?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலைத் தலைவர் 8–7–1963 முதல் 1–5–1964 வரையுள்ள கால அளவில் கோயம்புத்தூர் மத்திய வங்கியிலிருந்து 11,060 ரூபாய்வரை காசோலைகள், (செக்) மூலமாக எடுத்திருந்தார்கள். ஆனால் எடுக்கப்பட்ட அந்தப் பணம் கூட்டுறவுப் பண்டகசாலையின் ரொக்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. இது இறுதித் தணிக்கைபற்றி தணிக்கையாளர் அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

* 246 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொண்டாமுத்தூர் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஊழல் சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்?

(இ) எத்தனை பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது? அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, (அ) ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையில் 7–7–1963 முதல் 25–3–1966 வரை பொய்க் கணக்குக் காட்டி ரூ. 10,500-ஐக் கையாடியதாக நான்கு பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. பின்னர் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

Dr. H. V. HANDE: May I know whether it is a fact that the President of Thondamuthur Co-operative Stores had been withdrawing large sums of money from the District Co-operative Bank even though cash balances remained in the Stores in 1963-64? Has any case been registered against the President and three others in April 1968 for misappropriation and mismanagement and the case withdrawn in July 1968? If it is so, may I know the reasons for withdrawing the case?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு பண்டகசாலையில் ரொக்கப் பணம் கையில் இருக்கும் போது, 10,500 ரூபாய் வகையில் செக் எழுதி வங்கியிலிருந்து பணம்